இணைப்பு

(724 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த அறிவிப்புகள் பற்றிய மாண்புமிகு பேரவைத் தலைவரின் குறிப்புகள்

மாமல்லபுரம் வரை தகவல் தொழில்நுட்பச் சாலை விரிவாக்கம், திருநின்றவூர்-பாடி இடையே உள்ள சாலையை ஆறுவழிப் பாதையாக்க ரூ.[illegible] கோடியில் திட்டம், தண்டலம்-பேரம்பாக்கம்-தக்கோலம் சாலை விரிவாக்கம், ரூபாய் 96 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூரில் புறவழிச்சாலை, 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 31 ஆற்றுப் பாலங்கள் மற்றும் 100 கோடி ரூபாய் மதிப்பில் 67 அரசு சாலைகள், 943.30 கோடி ரூபாயில் 18 இரயில்வே மேம்பாலங்கள், 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறுசேரியில் பல்வழிக்கு வாகன நிறுத்தம், டாக்டர் சிட்டார் வளாகத்திற்குச் செல்ல சுமார் 11 கோடி ரூபாய்க்கு சாலைக் கட்டமைப்பு ஆகியவற்றை 1-4-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

மதுரைக்கருகே 10,500 மனைகள் கொண்ட துணைக் கோள் நகரம் உருவாக்குதல், சென்னை சோழிங்கநல்லூரில் முன்கட்டுமானத் தொழில்நுட்பம் கொண்டு 612 கோடி ரூபாய் மதிப்பில் 1,500 பன்னடுக்குக் குடியிருப்புகள், 9 மாவட்டங்களில் சுயநிதித் திட்டத்தின்கீழ் சுமார் ரூபாய் 918.45 கோடி மதிப்பீட்டில் வீட்டு வசதி வாரிய வீடுகள், தமிழகமெங்கும் 4,454 அடுக்குமாடிக் குடியிருப்பு அலகுகள் உருவாக்கம், 3,500 பழுதடைந்த குடிசைப் பகுதி மாற்று வாரிய குடியிருப்புகளுக்குப் பதிலாகப் புதிய குடியிருப்புகள் குறித்தும், பாசன வசதியினை மேம்படுத்த தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தினை 18 மாதங்களுக்கு நீட்டித்தல், ரூ.109 கோடி மதிப்பீட்டில் மருதையாறு நீர்த்தேக்கம் அமைத்தல் குறித்தும், 4-4-2013 அன்று இரண்டு அறிக்கைகளை அளித்தார்கள்.

விவசாயிகளைப்போன்று மக்களின் பசிப் பிணி போக்கும் மீனவர்களுக்காக 75 விழுக்காடு மானியத்தில் வி.எச்.எப். மற்றும் எச்.எப். ரேடியோ கருவி வசதிகள் வழங்குதல், சென்னை சேத்துப்பட்டு ஏரியை நவீனப்படுத்தி சுற்றுலா மையமாக மாற்றுதல், 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மீன்பிடித் துறைமுகத்தை மேம்படுத்துதல் குறித்து 5-4-2013 அன்று ஓர் அறிக்கையை அளித்தார்கள்.

உயர் கல்விக்கு ஊக்கம் அளிக்கும் அண்ணா பல்கலைக்கழக மண்டல மையங்களுக்கு அடிப்படை வசதிகளுக்காக 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு, சுவாமி விவேகானந்தரின் பெயரில் ஒன்பது பல்கலைக்கழகங்களில் உயர் ஆய்வு மற்றும் கல்வி மையங்கள் அமைத்தல், ஒரு மகளிர் கல்லூரி உட்பட 12 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 3 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளும், ஸ்ரீரங்கத்தில் பொறியியல் கல்லூரியும், செய்யாறில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியும் துவக்குதல் குறித்தும், சென்னையில் 29 கோடி ரூபாய் செலவில் உலக சதுரங்க வாகையர் போட்டி நடத்துவது குறித்தும், இரண்டு அறிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 8-4-2013 அன்று அளித்தார்கள்.

பசுமை வீடு திட்ட அலகுக்கு ரூ.30 ஆயிரம் அளவுக்கு ஒதுக்கீட்டை உயர்த்துதல், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட வீடுகளுக்கு கூடுதலாக ரூ.20 ஆயிரம் வழங்குதல், தூய்மையான கிராம இயக்க விருதுகள் வழங்கி திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மையை மேம்படுத்துதல், ஊராட்சிகளில் 15,726 துப்புரவுப் பணியாளர் இடங்களைத் தோற்றுவித்தல், ஊராட்சி மற்றும் ஒன்றிய அலுவலகங்களில் சூரிய சக்திக் கலன்களைப் பொருத்துதல் குறித்து 9-4-2013 அன்று ஓர் அறிக்கையை மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்தார்கள்.

இராமநாதபுரம், தூத்துக்குடி மாவட்டங்களில் கடல் நீரைக் குடிநீராக்கும் புதிய நிலையங்கள், திண்டுக்கல், தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருப்பூர், திருச்சி மாவட்டங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், நகராட்சிகளில் திடக் கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் மற்றும் புதிய கொத்துப் பணியமைப்பு உருவாக்கம், திண்டுக்கல் மற்றும் தஞ்சாவூர் மாநகராட்சிகள் உருவாக்கம் குறித்த ஓர் அறிக்கையை 10-4-2013 அன்று அளித்தார்கள்.

ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டத்தின்கீழ் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தார்ச் சாலைகள் பராமரிப்பு, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்வகையில் பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு 1,000 கி.மீ. நீள தார்ச் சாலைகள் அமைத்தல், ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி அலுவலகங்களுக்கு கட்டடம் உட்பட அடிப்படை வசதிகள், ஊரகச் சொத்துப் பராமரிப்புக்கு ரூ.100 கோடி நிதிஒதுக்கீடு குறித்தும் 15-4-2013 அன்று ஓர் அறிக்கையை அளித்தார்கள்.

எழில்மிகு சென்னையை விரைவில் உருவாக்கும்வகையில் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்குப் புதிய குடிநீர் மற்றும் கழிவு நீரகற்றுத் திட்டங்கள், நவீன மின் விளக்குகளுடன் ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு ஏற்படுத்துதல் குறித்து 16-4-2013 அன்று ஓர் அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அளித்தார்கள்.

இரண்டாவது வெண்மைப் புரட்சியைத் துரிதப்படுத்தும் வண்ணம், சுமார் 95 கோடி ரூபாய் செலவில் அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல், தரமான பால் வழங்கும் சங்கங்களுக்கு விருதுகள் வழங்குதல் குறித்து ஓர் அறிக்கை, பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பதிவுசெய்த பெண் குழந்தைகளுக்கு வைப்புத் தொகை முதிர்வுடன், 4 கிராம் தங்கம் மற்றும் திருமண நிதி உதவி வழங்குவது, அதற்கான வயதுவரம்பை 18 ஆகக் குறைப்பது, குடும்ப வருமான வரம்பை 24 ஆயிரம் ரூபாயிலிருந்து 72 ஆயிரம் ரூபாயாக உயர்த்துவது, அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை வழங்குவது, சுமார் 7.12 கோடி ரூபாய்க்கு எடை பார்க்கும் கருவிகள் மற்றும் சிறப்பு ஓய்வூதிய உயர்வு வழங்குவது குறித்து ஓர் அறிக்கை என இரண்டு அறிக்கைகள் 17-4-2013 அன்று அளிக்கப்பட்டன.

இந்தியாவிலேயே முதன்முறையாக டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு வறட்சிக்கால நிவாரணம் அளித்ததுபோல, டெல்டா அல்லாத மாவட்ட விவசாயிகளுக்கும் சுமார் 1,754 கோடியே 86 இலட்சம் ரூபாய்க்கு நிவாரண உதவிகள் வழங்குவது குறித்து வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் அறிவிப்பை 19-4-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கினார்கள்.

கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களிடம் கடன் பெற்றவர்களுக்கும், வீட்டு வசதி வாரிய வீட்டு ஒதுக்கீடு பெற்றவர்களுக்கும் வட்டிச் சலுகைத் திட்டத்தை 6 மாதங்களுக்கு நீட்டிப்பது குறித்த அறிக்கை ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 22-4-2013 அன்று அளித்தார்கள்.

தமிழ்நாடு மின் உற்பத்தியில் தன்னிறைவை அடைந்து மின் மிகை மாநிலமாக உயர்வதற்கான புதிய புனல் மின் திட்டம்,

56 துணை மின் நிலையங்கள் மற்றும் மின் தொடர் பாதைகள் அமைத்தல், 20 ஆயிரம் புதிய மின்மாற்றிகள் அமைத்தல், 15,000 கிலோ மீட்டருக்கு புதிய மின் வழித்தடங்கள் அமைத்தல், வீட்டு மேற்கூரை சூரிய ஒளி அமைப்புகளுக்கு மானியம் என மொத்தம் 16,350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க தொலைநோக்குத் திட்டங்களடங்கிய நீண்ட அறிக்கையினை மாண்புமிகு அம்மா அவர்கள் 25-4-2013 அன்று அளித்தார்கள்.

சென்னையிலுள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வண்டலூர் அருகே புதிய புறநகர்ப் பேருந்து நிலையம் அமைக்கப்படவுள்ளது பற்றிய அறிக்கை ஒன்றை 30-4-2013 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்தார்கள்.

மாநில அரசு ஊழியர்களுக்கு 8 சதவீத அகவிலைப் படி உயர்வை அறிவித்து ஓர் அறிக்கை, மாநிலத்தில் நான்கு புதிய வன உயிரின சரணாலயங்களை ஏற்படுத்துதல், பசுமைப் போர்வையை அதிகரிக்க 3 கோடி மரக் கன்றுகள் நடுதல், யானை புகா அகழிகள் அமைத்தல், காவல் துறையினரைப் போல வனப் பணியாளர்களுக்கு சீருடை வழங்கி படிகள் உயர்த்துதல் பற்றிய அறிக்கை, சுற்றுச்சூழலை மேம்படுத்த பிளாஸ்டிக் கழிவுகளைக்கொண்டு தரமான சாலைகளை அமைத்தல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு வாரிய அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் மற்றும் வாரியப் பணியாளர்களுக்கு வீட்டு வசதிக் கடன்கள் வழங்குதல் பற்றிய ஓர் அறிக்கை என 2-5-2013 அன்று மூன்று அறிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்தார்கள்.

உணவு தானிய பாதுகாப்பை உறுதிசெய்ய சேமிப்புக் கிடங்குகள் மற்றும் கொள்கலன்கள் கட்டுதல், பொது விநியோகப் பணிகளை ரூபாய் 20 கோடி செலவில் கணினிமயமாக்கல், தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 36 கோடி ரூபாய்க்கு சிறப்பு காசுக் கடனுதவி வழங்குதல் போன்றவை குறித்து ஓர் அறிக்கை; இந்தியாவிலேயே முதல் முறையாக கால்நடைகளுக்கு மறுசீரமைப்பு மருத்துவ முறையை அறிமுகப்படுத்தி ரூ.6.48 கோடி செலவில் ஆதார் செல் ஆராய்ச்சி மையம் அமைத்தல் மற்றும் 53 அல்ட்ராசவுண்டு ஸ்கேன் கருவிகள் வழங்குதல் பற்றி ஓர் அறிக்கை,

இரண்டாவது பசுமைப் புரட்சியை உருவாக்க விவசாயிகளுக்கு குறைந்த செலவில் நீர்ப்பாசனத் தெளிப்பான்கள் வழங்குதல், தரிசு நில மேம்பாடு, கரும்பு, துவரைப் பயிர் மேம்பாடு, விவசாயிகள் சேவை மையம் மற்றும் சிறப்பு நோக்க அமைப்பு நிறுவுதல், தென்னை மற்றும் வாழைக்கு சிறப்பு வணிக வளாகம் அமைத்தல் என விவசாயத்திற்காக ஒரே நாளில் ரூ.384 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவுக்கான திட்டங்களுக்கான ஓர் அறிக்கை என மூன்று அறிக்கைகளை 6-5-2013 அன்று அளித்தார்கள்.

சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு 10 அம்சங்கள்கொண்ட சிறப்புச் சலுகை தொகுப்பு அறிமுகம் செய்வது குறித்தும், ஸ்ரீரங்கம் தொகுதியில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் 1,300 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய ஆலை நிறுவுதல், நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூபாய் 3,500 கோடிக்கு மாபெரும் தொழில் திட்டம் உருவாக்குதல், தென் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை உருவாக்க எண்ணிலடங்கா சலுகைகளை வழங்குதல் குறித்தும் இரண்டு முக்கிய அறிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் 7-5-2013 அன்று அளித்தார்கள்.

நெசவாளர்களுக்கென தனியே 10,000 பசுமை வீடுகள் கட்டித் தருதல், 6,000 மோட்டார் பொருத்தப்பட்ட பெடல் தறிகள் வழங்குதல், விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்களில் ஐந்தாண்டு பணி முடித்த தற்காலிகப் பணியாளர்களுக்கு கால முறை ஊதியம் வழங்கல், கிராமந்தோறும் பட்டு விவசாயத்தை ஊக்கப்படுத்த சிறப்புச் சலுகைகள், வசதிகள் அளித்தல், கைத்தொழில் கலைஞர் விருதுகள் வழங்கி ஊக்குவித்தல், ஸ்ரீரங்கம் அருகே 100 மகளிருக்கு கைத்திறப் பயிற்சி மற்றும் உதவித் தொகை வழங்குதல் பற்றிய அறிக்கை, அரசின் மின் ஆளுமை முயற்சியினை மேம்படுத்திட மேகக் கணினியத்தை அறிமுகம் செய்தல், பெரும்பரப்பு வலையமைப்பை பயன்படுத்தி, புவிசார் வரைபடக் காப்பகம் அமைத்தல், 10 கோடி ரூபாய்க்கு மின் ஆளுமை முயற்சிக்கான நிதியம் அமைப்பது பற்றிய அறிக்கை, நுண்ணாறு தொற்று நோய் ஆய்வகங்கள் அமைப்பதோடு, இந்திய முறை மருத்துவத்திற்கான கட்டமைப்பினை அதிகப்படுத்தி, மாவட்ட தலைமை மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மகளிர்-குழந்தைகள் மருத்துவப் பிரிவுகள் ஆகியவற்றை

மேம்படுத்துதல், சுகாதாரத் துறையினருக்குப் பயிற்சியளித்தல், அனைத்து மாவட்டங்களிலும் புற்று நோயாளிகளுக்கு வெளிப்பு மையங்கள் அமைத்தல், பான் மசாலா, குட்கா போன்ற மெல்லும் புகையிலைப் பொருட்களுக்குத் தடை விதித்தல் பற்றிய அறிவிப்பு என மூன்று அற்புதமான அறிவிப்புகளை 8-5-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அவையில் அறிவித்தார்கள்.

பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகள் அமைத்தல், 68 புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டுவதோடு, பராமரிப்புக்கு 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு, உதவித் திட்டங்களுக்கான பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பை இருமடங்கு உயர்த்தி, இரண்டு இலட்சம் ரூபாய் ஆக்குதல் மற்றும் டாப்செட்கோ வழங்கிடும் அலுவலகக் கட்டடம் கட்டுதல் குறித்த அறிக்கை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்ட உதவிகளுக்கான குடும்ப வருமான வரம்பையும் இருமடங்காக 2 இலட்சம் ரூபாய்க்கு உயர்த்துதல், முனைவர் பட்டப் படிப்புக்கு உதவித் தொகை 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்துதல், 54 ஆதி திராவிட-பழங்குடியின விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல், இந்தியாவிலேயே முதல் முறையாக மாநில அரசுப் பணியாளர் தேர்வாணைய குரூப்-1 தேர்வுக்கு தயார்படுத்தும் பயிற்சிக்கும், இந்த சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பட்டயக் கணக்கர், செலவுக் கணக்கராகச் சுயதொழில் தொடங்கவும், நபர் ஒருவருக்கு ரூபாய் 50 ஆயிரம் உதவித் தொகை வழங்குதல் குறித்த அறிக்கை என இரண்டு அறிக்கைகளை 9-5-2013 அன்று வெளியிட்டார்கள்.

மூன்றாவதாக அதே நாளன்று, மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் ஒரு மகத்தான மறுமலர்ச்சியை ஏற்படுத்தும்வண்ணம், அவர்களது கல்வி உதவித் தொகையை இரு மடங்காக உயர்த்துதல், விலையில்லாத பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டத்தில் பயனாளிகளின் எண்ணிக்கையை 400-லிருந்து 1,000 ஆக உயர்த்துதல், மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு 32 நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் அமைத்தல், பார்வையற்ற மாணவர்களுக்கு வழங்கப்படும் வாசிப்பாளர் உதவித் தொகையை இரு மடங்காக உயர்த்துதல் பற்றிய தொலைநோக்கு அறிவிப்பு ஒன்றையும் வெளியிட்டு, மாற்றுத் திறனாளிகளின் அன்னையாக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்குகிறார்கள்.

2013 மே 16]

புதிதாக 25 போக்குவரத்துப் பணிமனைகள் அமைத்தல், மலைப் பகுதிகளுக்கு சிற்றுந்து சேவைகள் அறிமுகம், சென்னையில் மகளிர்-குழந்தைகளுக்கான பேருந்துகளை அதிகரித்தல், பயண முன்பதிவிற்குச் சலுகை, கணினிமயமாக்கப்பட்ட பயண அட்டைகள், புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் அமைத்தல், ஓட்டுநர் தேர்வு தளங்களைக் கணினிமயமாக்கல் குறித்த ஓர் அறிக்கை, துவாக்குடியில் மாநில உணவக மேலாண்மை நிறுவனத்தை மேம்படுத்துதல், திண்டிவனம் வட்டம், ஸ்ரீமுக்யாசலேஸ்வரர் கோயிலைப் புனரமைக்க ரூ.1 கோடி நிதி வழங்கல், கல்வெட்டு மைப்படிகளை எண்ணியல் முறையில் ஆவணப்படுத்த 50 இலட்சம் ரூபாய், சென்னை தேசிய கலைக் கூடத்தைப் பழுதுநீக்க 11 கோடி ரூபாய், கவின் கலை, சிற்ப மற்றும் இசைக் கல்லூரி மாணவர்களுக்கு மடிக் கணினி உள்ளிட்ட வசதிகள், இசை மற்றும் கவின் கலைக்கென தனி பல்கலைக்கழகம் அமைத்தல் குறித்த அறிக்கை, அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக சீர்மிகு சட்டப் பள்ளி [illegible] பட்ட மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை, அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு பெருங்குடியில் புதிய கட்டடம், சட்டக் கல்லூரிகளுக்கு விடுதி மற்றும் அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் பற்றிய ஓர் அறிக்கை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் மகளிருக்கென தனிச் சிறைகள் உருவாக்குதல், 13 மாவட்டச் சிறைச்சாலைகள் அமைத்தல், சிறையில் நவீன ஆடியூர் கத்திரிப்பு நிலையம் அமைத்தல், மேற்கூரை சூரிய ஒளிமின்கள் நிறுவுதல் குறித்து ஓர் அறிக்கை என நான்கு அறிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் 10-5-2013 அன்று அளித்தார்கள்.

சிறு ஓட்டல்களுக்கான ஆடம்பர வரி விலக்கு உச்சவரம்பை உயர்த்துதல், வணிக வரி மற்றும் பதிவுத் துறைக்குப் புதிய கட்டடங்கள், பதிவு ஆவணங்களை மைக்ரோ ஃபிலிமில் செய்தல், கணினிமூலம் வில்லங்கச் சான்றிதழ் பெறும் வசதி பற்றிய ஓர் அறிக்கை, தொழிலாளர் நலத் துறைக்கு சொந்தக் கட்டடங்கள், ஐ.டி.ஐ. தொழிற் பயிற்சியாளர்களுக்கு விலையில்லா பாடப் புத்தகங்கள், மொழி-மென் திறன் ஆய்வகங்கள், மடிக் கணினிகள், பேருந்து பயணச் சலுகை, மிதிவண்டிகள் உள்ளிட்ட பல சலுகைகள், திறன் மேம்பாட்டு இயக்கத்தை வலுப்படுத்தல் குறித்த அறிக்கை என 13-5-2013 அன்று இரண்டு அறிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அளித்தார்கள்.

பெண்கள் பன்னாட்டுத் தரக் கல்வி பெற ஏதுவாக கொடைக்கானலில் தமிழ்நாடு காமன்வெல்த் அன்னை தெரசா மகளிர் பன்னாட்டு மையம் அமைத்தல், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.6,000 கோடிக்கு வங்கிக் கடன் இணைப்பு உள்ளிட்ட எண்ணிலடங்கா சலுகைகள், ஆதி திராவிட பழங்குடியின மாணவியர் கல்வி ஊக்குவிப்பு உதவி விரிவாக்கம், விடுதிகளுக்கு சலவை இயந்திரங்கள், பணிபுரியும் பெண்களுக்கென 20 விடுதிகள் அமைத்தல், பெண்கள் கட்டுறவுக் கடன் பெற 5 கோடி ரூபாய் மானியம் என பெண்ணினத்திற்குப் பெருமை சேர்க்க வரலாற்றில் இல்லாத அளவுக்கு அறிவிப்புகள் அடங்கிய ஓர் அறிக்கை, திருக்கோயில் அன்னதானத் திட்ட விரிவாக்கம், ஆதி திராவிடர் பகுதி திருக்கோயில் உள்ளிட்ட கோயில்களுக்குத் திருப்பணி நிதி வழங்கல், உலோகத் திருமேனி பாதுகாப்பு மையங்கள் அமைத்தல், கோயில் பணியாளர்களுக்கு ஓய்வூதிய உயர்வு, திருக்கோயில் கலை ஓவியங்களைப் புதுப்பிக்கத் திட்டம் ஆகியவை குறித்து ஓர் அறிக்கை, சங்கத் தமிழ் தலைநகராம் மதுரையில் தமிழன்னைக்கு ரூ.100 கோடி செலவில் சிலையமைத்தல், திரு. ஜி.யு. போப் விருது, உமறுப் புலவர் விருது மற்றும் முதலமைச்சரின் கணினித் தமிழ் விருது உள்ளிட்ட விருதுகள் வழங்கி தமிழ் வளர்ச்சியை ஊக்குவித்தல், திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழக தமிழ்ப் பிரிவிற்கும், தில்லி தமிழ்ச் சங்கத்திற்கும் நிதியுதவி, தொல்காப்பியர் பெயரில் ஆய்விருக்கை உருவாக்குதல், வீரமங்கை வேலு நாச்சியாருக்கு சிவகங்கை மாவட்டத்தில் நினைவுச் சின்னம் அமைத்து, அவரது பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடுதல், பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதியத்தையும், குடும்ப ஓய்வூதியத்தையும் உயர்த்துதல், அரசு மைய அச்சகத்திற்கு நவீனக் கட்டடம் கட்டுதல் குறித்த அறிக்கை, மாநிலத்தில் புதிய விளையாட்டுக் கொள்கையை வகுத்தல், "முதலமைச்சரின் அனைவருக்கும் உடல் ஆரோக்கியத் திட்டம்" அறிமுகம், ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தை ரூபாய் 12 கோடி செலவில் மேம்படுத்துதல், மாண்புமிகு முதலமைச்சரின் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், வீரர், வீராங்கனைகளுக்கு வசதிகள் அளித்தல், தலைமைச் செயலக பணியாளர்களுக்கு நவீன உடற்பயிற்சிக் கூடம், சிறுவர்களுக்கு முதன்மை விளையாட்டு மையம் அமைத்தல், என்.சி.சி.-க்கு ரூபாய் 12 கோடியில் பயிற்சி அகாடமி, உடற்கல்வி பல்கலைக்கழகத்திற்கு நவீன உடற்பயிற்சிக் கூடம் நிறுவுதல் பற்றிய அறிக்கை என

14-5-2013 அன்று நான்கு முத்தான அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வெளியிட்டார்கள்.

25 புதிய வருவாய் வட்டங்களை உருவாக்குதல், சொந்தக் கட்டடங்கள் கட்டுதல், தமிழகக் கடலோரப் பாதுகாப்பை மேம்படுத்த பேரிடர் இன்னல் குறைப்புத் திட்டத்தை அறிமுகம் செய்தல் பற்றிய ஓர் அறிக்கை, 300 மக்கள்தொகை கொண்ட குடியிருப்புகளுக்கு 54 புதிய தொடக்கப் பள்ளிகள் மற்றும் அதற்கான பணியிடங்கள் வழங்குதல், 100 உயர்நிலைப் பள்ளிகளைத் தரமுயர்த்தி 1000 பணியிடங்களைத் தோற்றுவித்தல், இடம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு அவர்களது தாய் மொழியில் கல்வி வசதி வழங்குதல், தமிழ்நாடு பாடநூல் கழகம்மூலம் மாணவர்களுக்கான அனைத்து உபகரணங்களையும் கொள்முதல் செய்தல், விளையாட்டுப் போட்டிகள் நடத்த 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தல், பெண்களுக்கென 44 விடுதிகள் கட்டுதல் பற்றிய அறிக்கை, பசிப் பிணியினைப் போக்கும் மருத்துவராக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் சென்னையில் அறிமுகம் செய்த மலிவு விலையில் தரமான, சுவையான உணவு வழங்கும் "அம்மா உணவகங்களை" இதர 9 மாநகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தி, புதிய உணவு வகைகளைச் சேர்ப்பது பற்றிய அறிக்கை, சூரிய சக்தியில் இயங்கும் பம்புசெட்டுகள் மற்றும் நுண்ணீர் பாசன அமைப்புகளை 80 விழுக்காடு மானியம் மற்றும் கூட்டுறவுக் கடன் வசதியுடன் விவசாயிகளுக்கு வழங்குதல், விடுதலைப் போராட்டத்தில் பெரும்பங்கு வகித்த வீரமங்கை வேலு நாச்சியார் அவர்களுக்கு அமைக்கப்படவுள்ள நினைவு மண்டப வளாகத்திலேயே அவரது தளபதி வீரத்தாய் குயிலிக்கு நினைவுச் சின்னம் அமைத்தல், மாவீரர் ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் ஆகியோருக்கு திண்டுக்கல்லில் ஒரே வளாகத்தில் மணிமண்டபம் அமைத்தல், ஒடுக்கப்பட்ட மக்களின் கல்விக் கண் திறந்த சுவாமி சகஜானந்தா அவர்களுக்கு சிதம்பரத்தில் மணிமண்டபம் அமைத்தல், சென்னையிலுள்ள டாக்டர் அம்பேத்கர் அவர்களது மணிமண்டபத்தைப் புனரமைத்தல் பற்றிய அறிக்கை என ஐந்து அறிக்கைகளை 15-5-2013 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.